# தமிழில் பேசுவோம்

இவ்வுலகில் பல்வேறு இன மக்கள் வாழ்கின்றனர். ஒவ்வொரு இன மக்களுக்கும் உரிய மொழியாக அவர்கள் பேசும் மொழியாக ஒவ்வொரு மொழி இருக்கும். இதனையே தாய்மொழி என்கின்றோம்.

தமிழராகிய எமது தாய்மொழி தமிழாகும். தமிழே உலகில் தோன்றிய முதன்மொழி என்றும் அம் மொழி உலகில் உள்ள மொழிகள் பலவற்றிலும் காணப்படுகின்றது என்றும் பல்வேறு நாட்டைச் சேர்ந்த அறிஞர் பலரும் நிறுவியுள்ளனர். இன்னும் நிறுவி வருகின்றனர். செம்மொழி என்ற உயர் தகுதியும் எம் மொழிக்குக் கிடைத்துள்ளது. தேன்தமிழ், பைந்தமிழ், செந்தமிழ், அருந்தமிழ், தீந்தமிழ் என்றெல்லாம் பல்வேறு சிறப்புப் பெயர்களை எம் மொழி பெற்றுள்ளது. அத்துடன் எம் மொழியின் சிறப்புக் கருதி பல்வேறு இன மக்களும் எம் மொழியைக் கற்கவும் பேசவும் தொடங்கியுள்ளனர். ஆனால் இவ் இனிய மொழிக்கு உரியவராகிய நாம் எம் மொழியைப் பேசப் தயங்குகின்றோம். பல்வேறு இனத்தவரிடையே வாழும் ஒவ்வொரு இனத்தவரும் தன் இனத்தவரைக் காணும்போது தம் தாய் மொழியிலேயே பேசுகின்றனர். ஆனால் எம்மிற் பலர் வீட்டிலும் வெளியிலும் தனது நண்பரையோ உறவினரையோ காணும்போது தங்கள் வாழிடமொழியிலேதான் பேசுகின்றனர். இது மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும். தமிழரோடு தமிழ் கதைக்காமல் வேறு யாருடன் தமிழ் கதைக்கப் போகின்றோம். இந்நிலை தொடர்ந்தால் எம் மொழியின் நிலை என்னவாகும். பேசப்படாத மொழி வீசப்பட்ட மொழி என்று கூறுவர். எனவே தமிழராகிய நாம் தமிழருடன் தமிழில் பேசுவோம். எம் உயிரினும் மேலான மொழியைக் காப்போம்.